செ.வெ.எண்.30 நாள்.11-1-2011

## தமிழ் நாட்டில் உள்ள நீர் பறவைகள் கணக்கெடுப்பு

தமிழ்நாடு வனத்துறை ஆண்டுதோறும் வன உயிரினங்களை கணக்கெடுப்பது போல தமிழ்நாட்டில் நீர்நிலைகளில் காணப்படும், இடம் பெயரும் பறவைகளும், உள்நாட்டு நீர்நிலைப் பறவைகள் எண்ணிக்கை எடுப்பதை கடந்த ஆண்டிலிருந்து செய்து கொண்டு வருகிறது. நீர் பறவைகளின் எண்ணிக்கை இந்தியா அளவில் தமிழ்நாட்டில் தான் ஆராயப்பட்டுள்ளது. உலகளவில் ஒவ்வொரு நாட்டிலும் ஜனவரி மாதம் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் நீர் பறவைகளின் எண்ணிக்கை நடத்தப்படும். தமிழ்நாட்டில் காணப்படும் நீர்நிலைகள், பறவைகள் சரணாலயங்களில் காணப்படும் நீர் பறவைகளின் எண்ணிக்கை மதிப்பீடு செய்ய இந்த ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான சிறப்பு பயிற்சி வனவர்கள் மற்றும் வனக்காப்பாளர்களுக்கு கோடியகரை சரணாலயத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 3 மற்றும் 4–ல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நீர் பறவைகளின் கணக்கெடுப்பின் மதிப்பீடு 11 மற்றும் 12 ஜனவரி மாதம் 2011 தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் ஒரே சமயத்தில் காணப்படும் நீர் பறவைகள் கணக்கெடுப்பு மதிப்பீடு செய்ய மாவட்ட வன அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நீர் பறவைகளின் மதிப்பீட்டின் எண்ணிக்கை வைத்தும், நீர் பறவைகளின் இனங்களைப் பொறுத்தும் தமிழ்நாட்டில் நீர்நிலைகள் ஆரோக்கியமாக உள்ளதா, அல்லது நீர்நிலைகள் சீர்கெட்டுப்போய் விட்டதா என்பதைக் காண இது ஒரு அளவு கோளாகும். தமிழ்நாட்டில் காணப்படும் சுமார் 200 நீர் பறவை இனங்களில் சுமார் 167 நீர் பறவை இனங்கள் வெளிநாட்டில் இருந்து குறிப்பாக ரஷ்யா, மங்கோலியா, சைனா, திபேத் மற்றும் மத்திய ஆசியா ஆகிய நாடுகளிலிருந்து கடும் குளிரைத் தவிர்ப்பதற்கும், இரை தேடுவதற்கும் தென் மண்டலத்தை நோக்கி இடம் பெயர்ந்து வருகிறது. ஒரே சமயத்தில் இந்த நீர் பறவைகள் மதிப்பீட்டில் எந்தெந்த இனங்கள், எந்தெந்த நீர்நிலைகளுக்கு செல்கிறது, எந்தெந்த இனங்கள் முன்பு வந்து தற்போது வராமல் இருப்பது பற்றியும் ஏன் அதன் எண்ணிக்கை குறைவாக இருப்பது போன்ற இலக்கங்களுக்கு இந்த கணக்கெடுப்பு மதிப்பீடு உதவும்.

இந்த மதிப்பீடு கடந்த ஆண்டு பறவைகள் சரணாலயத்தில் ஒருசில நீர்நிலைகளில் கணக்கெடுத்ததில் 132 வகையைச் சேர்ந்த 6,32,000 நீர் பறவைகள் வந்துள்ளன என்று கடந்த ஜனவரி 2010 கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இதே போன்று இந்த ஆண்டும் தமிழ்நாட்டில் நீர் பறவைகள் கணக்கெடுப்பு (11–01–2011 மற்றும் 12–01–2011) நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு வனத்துறைத் தெரிவித்துள்ளது.

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும்
தலைமை வன உயிரினக் காப்பாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.